திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

R.T. ARASU

மாலை 17 : 26-10-63 சனிக்கிழமை : விலை 16 காசு. : மலர் 13

கழகத்தின் மீது கணைகள்!

ஆதிக்க புரியினரின் நயவஞ்சகத் திட்டத்துக்கு கழகத்தை பலியாக்க மாட்டேன்!

திராவிட நாடு பிரிவினை கேட்பதைத் தடை செய்யும் சட்டத்தை நேரடியாக எதிர்க்கத் துணிவின்றி இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்; எனவே, 'இந்தி எதிர்ப்புப் போர் நடத்தி வெளிச்சம் போட்டுக்கொண்டு திரிய விரும்புகிறது'—என்ற கருத்துப்பட 'இந்து' இதழ் எழுதியிருக்கிறது.

இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படும் அக்கிரமத்தை எதிர்க்கும் ஏடு, 'இந்து'

என்றாலும், இந்தி விஷயமாக எவ்வளவு வெறுப்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு, 'இந்து' இதழுக்கு தி. மு. கழகத்திடமும் இருக்கிறது.

தி.மு. கழகம், 'இந்து' போன்ற இதழினரின் ஆதரவைப் பெற முடியாமல் இருப்பது, என்னைப் பொறுத்தவரையில் வருத்தம் தருவதுதான்.

என்றாலும், பிரச்சினைகளை, அடிப்படை உண்மைகளை மனத்திற்கொண்டு ஆராய்ந்து பார்க்கவேண்டுமேயன்றி, அந்தப் பிரச்சினைகளுடன் தொடர்பு கொண்டவர்களின் பேரில் காரணத்தோடோ, காரணமற்றோ இருக்கக்கூடிய விருப்பு வெறுப்பை வைத்துப் பார்ப்பது முறையுமல்ல—பண்புமாகாது.

ஆனால், 'இந்தித் திணிப்புக் கூடாது' என்ற எழுச்சி கொள்ளும் நேரத்திலே கூட, 'இந்து' இதழினால், கழகத்தின்மீது கொண்டுள்ள வெறுப்புணர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

பொறுப்புணர்ச்சி காரணமாக 'இந்து' போன்ற இதழ் இத்தகைய விருப்பு வெறுப்புக்களை மேலோங்க விடாமல், பிரச்சினைகளை ஆராயும் என்று நான் நம்புபவன். எனவே, இந்தி எதிர்ப்புக்கான அறப்போர் குறித்து எழுத முன்வந்த 'இந்து' இதழ், காட்டியுள்ள போக்குக் கண்டு பெருத்த ஏமாற்றம் அடைந்தேன்.

ஆனால், தொடர்ந்து தன் தூய்மையையும் நேர்மையையும் காட்டுவதன் மூலம், இன்று இல்லாவிட்டாலும் ஒருநாள்—'இந்து' இதழினர் போன்றோரின் நல்லாதரவையும் பெற முடியும் என்ற நம்பிக்கையை இழக்காமல் கழகம் பணியாற்றிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்தி எதிர்ப்பு மூலம், கழகம், வெளிச்சம் போட்டுக் கொண்டு திரிய விரும்புகிறது"

—என்று 'இந்து' இதழ் எழுதுகிறது.

அது உண்மைதானா என்பது ஒருபுறம் இருக்கட்டும். நான் இதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்—

கழகம் வெளிச்சம் போட்டுக் கொண்டு உலவ விரும்பினால்கூட, அது எந்த வகையிலே 'இந்து' இதழினருக்குக் கஷ்டம் தரும்—நஷ்டத்தை உண்டாக்கும்? புரியவில்லை! 'இந்து' இதழினர் கூட, புரிந்து கொள்ளாமல்தான இதனை எழுதுகிறார்கள்—என்று நினைக்கிறேன்.

அறிஞர் அண்ணா

விருப்பு வெறுப்பு எனும் உணர்ச்சிகள் மேலோங்கிவிடும்போது, கண்ணோட்டம்—சீர்தூக்கிப் பார்த்தல்—கெட்டுவிடுகிறது போலும்!

இனி வெளிச்சம் போடுவது பற்றிப் பார்ப்போம்—

இப்போது கழகம், இருட்டறையில் இல்லை; மக்களிடம் பொலிவும் வலிவும் கொண்டதோர் அமைப்பாக விளங்கிக்கொண்டு வருகிறது.

கழகத்தின் செயலையும் சொல்லையும் மக்கள்—ஆதரவாளர்களாயினும்சரி, எதிர்ப்பாளராயினும் சரி—கூர்ந்து கவனிக்கத்தக்க நிலை இருக்கிறதே தவிர, அலட்சியப்படுத்தும் நிலை இல்லை. இது எவரும் உணரக்கூடிய உண்மையாகும்.

எனவே, இந்த நிலை பெற்றுள்ள கழகம், வெளிச்சம் போட்டுக் கொண்டு இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

நான், மாநாட்டிலே தெளிவாகத் தெரிவித்தபடி-இந்தி எதிர்ப்பு, கழக வலிவை எடுத்துக்காட்டவும் அல்ல—கழக வலிவைப் பெருக்கிக்கொள்ளவுமல்ல! விவரம், விளைவு தெரியாத விளையாட்டுத்தனமுமல்ல—வீராப்பான முறையுமல்ல! பிரச்சினையின் தீர்வுக்காக, அறப்போர் முறையை மேற்கொள்ள வேண்டிய கட்டத்தக்குக் கழகம், படிப்படியாக வந்து சேர்ந்திருக்கிறது.

"பிரிவினைத் தடைச் சட்டத்தை நேரடியாக எதிர்த்திட அஞ்சுகிறது, கழகம்" என்கிறது 'இந்து' இதழ் உடனே, நேரடி உணர்ச்சி மேலிட்டு, 'ஆகா அப்படியா எண்ணிக் கொண்டீர்கள்? பாருங்கள் கழக எதிர்ப்பை' என்று கிளம்பிக் கொக்கரிக்கும் அளவுக்கு பொறுப்புணர்ச்சி அற்றதாகக் கழகம் இல்லை.

'இந்து' இதழின் கேலி மொழி காதில் விழுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே, அறப்பெரு நூலாசிரியராம் வள்ளுவப் பெருந்தகை சொன்ன—

அஞ்சுவது, அஞ்சாமை, பேதமை

என்ற பொய்யாமொழி, கழகத்தவரின் செவிவழி சென்று, சிந்தையில் பதிந்திருக்கிறது.

உணர்ச்சிகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுப் பிரச்சினையைப் பார்த்தாலும், ஒரு மறுக்க முடியாத உண்மை தெளிவாகிறது.

பிரிவினைத் தடைச் சட்டத்தை மீறி ஓர் அரசியல் கட்சி, அமைப்பாக இயங்க முடியாது.

பிரிவினைத் தடைச் சட்டத்தை மீறி ஓர் அரசியல் கட்சி ஆட்சிமன்றங்களில் இடம்பெற்று, பொதுமக்களின் நல்லாதரவு தனக்குக் கிடைத்திருக்கிறது—என்ற முத்திரையைப் பெறமுடியாது.

மிகத் தெளிவாகத் தெரியும் இந்த உண்மையை உணருபவர்கள், பிரிவினைத் தடைச் சட்டத்திற்குப்பிறகு, அதை எதிர்த்து, ஓர் அரசியல் கட்சி ஓர் அமைப்பாக எப்படி இயங்க இயலும்—என்று எதிர்பார்க்க முடியும்?

தனித் தனியாக உரிமையை நிலைநாட்ட—கொள்கையை வலியுறுத்த—தடைச் சட்டத்தைத் தக்க நேரத்தில் எதிர்த்திட—சிலரோ பலரோ எழ முடியுமே தவிர அந்தத் தடைச் சட்டத்தை மீற ஒரு அமைப்போ, கூட்டு முயற்சியோ எப்படி இருக்க முடியும்?

இதை மிக நன்றாக உணர்ந்துதான், கழகப் பொதுக் குழு, கழக அமைப்பு இயங்குவதற்கு ஏற்ற முறையில் நடவடிக்கைகளை ஆய்ந்தறிய ஒரு தனிக்குழுவை அமைத்திருக்கிறது.

அந்தக் குழுவினர் தரும் கருத்தினைத் துணைகொண்டு, தடைச் சட்டத்தின் காரணமாகக் கழகம் அழிக்கப்பட்டுவிடாமல், ஓர் அரசியல் அமைப்பாக இயங்கிக் கொண்டு வரத்தக்க முறையில் நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமையைப் பொதுச்செயலாளருக்கு அளித்திருக்கிறது.

இவை, மூடிவைக்கப்பட்டுள்ள தகவல்கள் அல்ல; நாட்டுக்கு அறிவிக்கப்பட்டுள்ள, செய்திகள்.

எனவே, 'கழகம் ஓர் அமைப்பாக இயங்கவேண்டும்' என்பதற்காக ஏதேனும் ஒரு புதுவழி வேண்டும்; அந்த வழி, 'இந்தி எதிர்ப்பு' என்று

1-ம் பக்கத் தொடர்ச்சி……

புதிதாகக் கண்டுபிடித்து, கழகம் வெளிச்சம் போட்டுக்கொள்ள முனையவில்லை.

கழகம், நாட்டுக்கு வெளிச்சம் தருவது—என்பது என் கருத்து. அதுதனக்கு ஒரு வெளிச்சம் போட்டுக் கொள்ளத் தேவையில்லை.

'பிரிவினைத் தடைச்சட்டத்தை நேரடியாக எதிர்க்கும் துணிவு இல்லாத கழகம்' என்று குத்திக் காட்டும் 'இந்து' இதழ், கழகம் பிரிவினைச் சக்தியாக இருக்கக் கூடாது—என்று, பலமுறை எடுத்துச் சொல்லும் போதகாசிரியர் வேலைபார்த்து வந்தது. இப்போது அந்த நிலை தானாக ஏற்படக் காணும்போது, விருப்பு வெறுப்பற்ற நடு நிலையாளர்' எனும் பண்பு இருப்பின், 'இந்து' இதழ் அதனை வரவேற்று நல்லுரை கூறியிருக்க வேண்டும்; ஆனால் மாறாக, குத்திக்காட்ட முற்படுகிறது!

இதிலிருந்து, 'இந்து' இதழினருக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது உள்ள வெறுப்புக்குக் காரணம், கழகம் பிரிவினை சக்தியாக இருக்கிறதே என்பது அல்ல—வேறு ஏதோ வெளியே கூற முடியாத அல்லது கூற விருப்பமில்லாத காரணத்தை மனதில் வைத்துக் கொண்டு இருக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

தன்னாட்சி தத்துவத்தைத்தான், 'பிரிவினை' என்று கெட்ட பெயரிட்டு அழைக்கிறார்கள் — கழக எதிர்ப்பாளர்கள்! கழக ஆதரவாளர்களும்—தன்னாட்சித் தத்துவத்தைத்தான், "பிரிவினை" என்று இடுகுறி பெயரிட்டு அழைக்கிறார்கள்!

"பிரிவினை" என்று கூறப்படும் தன்னாட்சித் தத்துவத்தில் பற்றுக்கொண்டவர்கள், தடைச் சட்டத்தினால் அந்தத் தத்துவம் தகர்க்கப்பட முடியாதபடி மேற்கொள்ள வேண்டிய வழி வகை கூறலாம்—துணை நிற்கலாம்.

இதற்கு ஒருவரும் முன்வரவும் காணோம். இருக்கும் திக்கும் என் கண்ணுக்குத் தென்படவில்லை!

கழகம் என்ற அமைப்பு இயங்கி வர வேண்டும்—என்பதிலே அக்கறை கொண்டோர், தடைச்சட்டத்தினால் கழகம் அழிக்கப்பட்டுப் போகாமலிருக்க வழி கூற வேண்டும்—துணை நிற்க வேண்டும்.

'இந்து' இதழினர் இந்த இரண்டு வகையினரில் எதிலே தன்னை சேர்த்துக் கொள்கின்றனர் என்பது புரியவில்லை—தெளிவாக்கப் படவில்லை!

மாறாக, ஒன்று தெரிகிறது தெளிவாக—கழகம் எதனை மேற்கொண்டாலும், எந்த வழியை கடைபிடித்தாலும், கழகத்தை பழித்திட ஒழித்திட முனையும் நோக்கம் மட்டுமே 'இந்து' இதழினர் போன்றோர் கொண்டுள்ளனர்!

இது நடுநிலையாளருக்குரிய பண்பு அல்ல!

உரிமைகள் பறிக்கப்படும்போது—தனித் தனியாக எவரும், உரிமைகளைப் பெறப் போராடலாம்; கூட்டாகவும் அந்தப் பணியில் ஈடுபடலாம்.

கூட்டாகச் செயலாற்றும்போது தான், ஓர் அமைப்பு—'கட்சி' என்ற பெயராலோ, 'கழகம்' என்ற பெயருடனோ இருக்கும்.

இப்போது கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி, அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளாமல், ஒருகட்சியோ, கழகமோ இயங்க முடியாது.

இந்த நிலையில், 'திராவிட முன்னேற்ற கழகத்தால், தடைசட்டத்தை நேரடியாகத் தாக்க முடியவில்லை — பயம் காரணமாக' என்று கூறுவது — 'இந்து' இதழ் கூறினாலும் பொருளற்ற பேச்சாகும்.

எனவே, 'திராவிட முன்னேற்றக் கழகம், என்ன செய்யப் போகிறது?' என்ற கேள்விக்கே இடமில்லை.

மக்கள் மத்தியில் இயங்குவதுதான் ஓர் அமைப்புக்கு உள்ள இலக்கணம்; அதற்குப் பெயர், 'கட்சி' என்று இருப்பினும் சரி — 'மன்றம்' என்றாலும் சரி—'கழகம்' எனினும் சரி.

மக்கள் மத்தியில் இயங்குவதுடன, மக்கள் ஆதரவைத் திரட்டி, மக்களின் ஆணையைப் பெறும் முறையான தேர்தலில் ஈடுபட்டுத் தன் வலிவினைக் காட்டும் கட்டத்துக்குப் பிறகுதான் ஒரு கட்சி, 'முழு வளர்ச்சி அடைந்திருக்கிறது' என்று பொருள்படும்—ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த முறையில் இயங்கும் உரிமையே சட்டத்தினால் பறிக்கப்பட்டு விடும்போது, 'தி. மு. கழகம் என்ன செய்ய முடியும்?'—என்று கேட்பதே, பொருளற்றதாகி விடுகிறது!

பொருளற்றன பேசியேனும் தமக்குள்ள பொச்சரிப்பு உணர்ச்சியைக் காட்டிக்கொள்வோர் இருக்கக் கூடும். 'இந்து' இதழ் ஏன் அந்தப் பட்டியலில் இடம் பெற வேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை!

'என்ன செய்யபோகிறது கழகம்?' என்று கேட்டால், ஒரே பதில்தான் இருக்கமுடியும்; கழகம் ஓர் அமைப்பாக இயங்கவேண்டுமானால் இயங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்ட முறைப்படி மட்டுமே இயங்க முடியும்.

இல்லை என்றால். தடைச் சட்டத்தை மீறுவதன் மூலம் கழகம் அழிக்கப்பட்டுப் போய்விட ஒருப்பட வேண்டும்.

எனவே, கழகம் ஓர் அமைப்பாக இயங்கவேண்டும் என்றால், பிரிவினைத் தடைச் சட்டத்தை மீறிடும் செயலில் ஈடுபடக் கூடாது.

பிரிவினைத் தடைச் சட்டத்தை மீறினால், அந்த கணம் முதல், 'கழகம்' என்ற அமைப்பு இல்லை!

எனவே, 'ஏன் பிரிவினைத் தடைச் சட்டத்தை மீறவில்லை?' என்று கேட்பவர்கள், 'ஏன் கழகத்தை இன்னும் சாகடிக்கவில்லை?' என்று கேட்கிறார்கள் என்றுதான் பொருள்.

கழகம் செத்தாலாவது, உயிரோடு இருக்கும் வீரரும் விவேகிகளும், 'தடை மீறிடத் தயாரா?' என்றால், இல்லை!

தேவையில்லை —
இயலவில்லை —
விருப்பம் இல்லை —

என்று பதிலுரையிலே வேறுபாடுகள் காணப்படுமேயன்றி, 'கழகம் செத்தால் என்ன, நாங்கள் இல்லையா உயிரோடு—பணியாற்ற' என்று கூறுபவர் எவரும் இல்லை!

'ஏன், கழகம், தடையை மீறவில்லை' என்று கேட்பவர்களின் உள் எண்ணம், 'கழகத்தைச் சாகடிக்க வேண்டும்' என்பதுதான் என்று புரிகிறது—தெளிவாக!

அந்த தெளிவு காரணமாகத் தான், தி. மு. கழகம் ஓர் அமைப்பாக இயங்கத் தக்க முறையில்—தடைச் சட்டத்தினால் பாதிக்கப்படாத வகையில் — கழகச் சட்டதிட்டத்திலே மாறுதல்களைச் செய்துகொள்ள, பொதுக்குழு கருத்தளிக்கிறது.

அந்த அடிப்படையிலே அமைந்திருப்பதுதான் அதற்கான தனிக் குழு.

அக்குழு அளித்திடும் ஆய்வுரையைச் சீர்தூக்கிப் பார்த்து, தக்க நடவடிக்கை எடுக்கும் உரிமையைப் பொதுச் செயலாளருக்குப் பொதுக் குழு அளித்திருக்கிறது.

பொதுக்குழு அளித்துள்ள உரிமை அடிட்படையில், 'என்ன் நடவடிககை மேற்கொள்ள வேண்டும்' என்பது பற்றி, நான் முடிவெடுக்க வேண்டியவன்,

அந்த முடிவு, 'இந்து' இதழினர் போன்றோர் மூட்டி விடும் வீராப்பு உணர்ச்சியால் உந்தப் பட்டு, கழகத்தை அழித்துக்கொள்ளும் முடிவு அல்ல!

கழகத்தைச் சாகடிச்க நான் அதன் பொதுச் செயலாளனாகவில்லை;—கழகத்தை இயங்க வைக்க—வாழவைக்க!

இந்த நோக்கத்துடன் நான் இருப்பதானது, கழகத்தின் பொதுக்குழுவின் ஒப்புதலைப் பெற்றதாகும்.

எனவே, 'கழகம், தடைச் சட்டத்தை மீற அஞ்சுகிறது' என்று பேசுவது' கிண்டிவிடும் போக்கு!

கழகம்—தடைச் சட்டத்தை மீறுவதாக இல்லை.

மாறாக, கழகம் இயங்குவதற்கு ஏற்றமுறையில், கழகத்தின் சட்ட திட்டம் திருத்தி அமைக்கப்படும்.

நான் செய்தியாளர்களிடம் முன்பே கூறியுள்ளபடி,—

கழகத்தின் பிரச்சாரத்தை எதிர்த்து மாய்த்திட முடியாமல் — கழகத்தைச் சமாளிக்க— இந்திய அரசியல் சட்டத்தையே திருத்திட ஆட்சியாளர், கூச்சத்தை விட்டு — வெட்கத்தை விட்டுத் தயாராகி விட்டபோது, நிலைமைக்கு ஏற்றபடி ஒரு கழகம், தன் சட்டதிட்டத்தைத் திருத்திக் கொண்டு இயங்குவதில் தவறு என்ன இருக்க முடியும்?

பேச்சுரிமை பறிக்கப்பட்டிருக்கிறதே — தலை குனியத்தான் வேண்டுமா? என்று கேட்டபின், 'இல்லை; பேச்சுரிமையைத் திரும்பப் பெறும் முயற்சி நடைபெற்றாக வேண்டும் பேச்சுரிமையைப் பறிக்கும் ஆட்சியாளரின் போக்கு அம்பலப்படுத்தப்பட்டாக வேண்டும்; அத்தகையோர் ஆட்சியிலிருந்து கீழே இறக்கப்பட்டாக வேண்டும்; இதனை, தடைச் சட்டத்தை மீறுவதால் சாதிக்க முடியாது; ஏனெனில், மீறும் போதே, கழகம் எனும் அமைப்பு உடை பட்டுப்போகும்— உருவம் அழிந்து போகும்.

எனவே தான், கழகம் உடைபடாமல்— உருவம் அழிக்கப்படாமல்— கழகம் இயங்கும் வழியில் கழகச் சட்ட திட்டத்தை மாற்றிக்கொண்டு, எதேச்சாதிகாரத்தை ஒழித்திடும் பணியில் ஈடுபட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படுகிறது.

'கொதிக்கிறதே, நெருப்புப்போல' என்று கூறியபடி, காய்ச்சல் கொண்டவன் பேரில், குளிர்ந்த தண்ணீரைக் குடம் குடமாகக் கொட்டுவது, வைத்திய முறை அல்ல—வாட்டி வதைத்து கொல்லும் முறை!

'இந்து' இதழினர் போன்றோரோ 'குடம் குடமாகக் கொட்டினுங் கூடப் போதாது; கிணற்றிலேயே விழ வேண்டும்' என்ற உத்தமமான யோசனையை கூறுகின்றனர்

கழகத்தைக் கிணற்றிலே தள்ளிச் சாகடிக்க நான் விரும்பவில்லை!

பயம் அல்ல— அந்தப் போக்குக்குக் காரணம்; அளவற்ற பாசம், பற்று அந்தக் கழகத்திடம்!

'என் மகனாக இருந்தால் வெட்டிப் போட்டுத் தலைமுழுகி விடுவேன்' என்று பேசிடும் மாதர்கள் உண்டு— மற்றவள் பெற்று வளர்த்த குழந்தையைப்பற்றி!

பெற்றவள் சம்மதிக்க மாட்டாள் — தன் குழந்தையைக் கொன்றுபோட! அவள் அறிவாள்—குழந்தையின் அருமையை!

கழகத்தைச் சாகடிக்க நான் விரும்புவேனா! நான் அறியமாட்டேனா—அதன் அருமை, பெருமையினை!

'மலடிவயிற்று மகன் போலே ஒரு புதையல் எடுத்த தனம் போலே'—கிடைத்தது அந்தக் கழகம்!

நாவலர் கூறியுள்ளபடி, கண்ணீரும் செந்நீரும் பெய்து வளர்த்தது அந்தக் கழகம்!

அதனை சிலர் மூக்கைச் சொரிந்து விடுவதிலே ஏமாந்தா, அழிய விடுவேன்!—இல்லை இல்லை! —கழகம் இயங்கவே வழி காண்பேன்!

பிற, பிறகே!

சிலப்பதிகாரத்தின் சிறப்பு

செந்தமிழ்க் காவலரைப் பாராட்டி நாவலர்.

சென்னை, ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் கடந்த மூன்றுண்டுகளாக திங்களிருமுறை சீரிய முறையில் சிலப்பதிகார வகுப்பு நடத்திய பட்டிமன்றத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதன் எம். எல். சி. அவர்களுக்கு 17-9-63 அன்று மாலை ஒரு பாராட்டு விழா செவ்விய வகையில் நடைபெற்றது. முன்னுள் மாகாணத் தலைமை நீதிபதி உயர்திரு. எஸ். ஏ. அய்யாசாமி (செட்டியார்) எம். ஏ.,பி.எல். அவர்கள் தலைமை தாங்கினுர்கள். இசைமணி கோவிந்தராசனின் தமிழ்த் தாய் வணக்கத்துடன், சிலப்பதிகாரப் பாடல்களுடனும் விழா துவங்கியது. மன்றத் துணைத் தலைவர் பேராசிரியர் மா. இளஞ்செழியன் எம்.ஏ. அவர்கள் அனைவரையும் வரவேற்றுர்.

தலைமையுரை

உயர்திரு எஸ்.'ஏ. அய்யாசாமி அவர்கள் தமது தலைமையுரையில் "காலஞ்சென்ற ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் இலண்டனுக்குச் சென்றிருந்த போது, அங்கு 200 நாட்களாக ஒரு நாடகம் தொடர்ந்து நடைபெறுவதைக் குறித்துப் பெருமையாகப் பேசப்பட்டதாம். அப்போது ஆர். கே. எஸ். அவர்கள் எங்கள் நாட்டில் 2000 ஆண்டுகளாக ஒரு நாடகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அது தான் கோவலன் கண்ணகி நாடகம் என்று அறியப்படும் சிலப்பதிகாரக் காவியம் என்றுராம். இவ்வாறு பல்லாண்டுகளாகத் தமிழ் மக்கள் சுவைப்பதற்கு உரியதாக இருந்துவரும் சிலப்பதிகாரத்தை, தமிழ்ப் புலமையுள்ள அறிஞர்களுள் மேல் வரிசையில் நிற்கும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் நமக்காகப் பாடஞ் சொல்லியது நாம் பெற்ற பேருகும். அவர்கள் இன்னும் பல காப்பியங்களை இவ்வாறு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இந்த விழாவிற்கு அந்தக் காலத்து நெடுஞ்செழியனையே (நாவலர் இரா. நெடுஞ்செழியன்) கொண்டுவந்து விட்டீர்கள் என்று கூறியபொழுது — மன்றத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் பெருகியது.

மகாவித்வான்

முதலில் செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனுரைப் பாராட்டிப் பேசிய மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் 'அவருடைய புகழ் என் சொல்லளவிலே அடங்குமோ என்று அஞ்சுகிறேன். என்றுலும் "முதுநரையாளன்' என்ற முறையில் முதலில் ஒரு சில கூற விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டுப் பேசியதாவது :

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாந் தன்னை வியந்து' என்று அந்த பண்பாட்டிற்காக ஒரு குறள் செலவழிக்கிருர். சிக்கனக்காரரான வள்ளுவர். இன்று பாராட்டப்படும் பெரியார், இதற்குரியவர், செயற்கரிய செய்த பெரியார்.' நான் அவருடைய நூல்களை அளவுகோல்வதற்காகப் படித்திருக்கிறேன். அவர்கள் ஆங்கிலத்தில் யாப்பிலக்கணம் பற்றி ஓர் அரிய நூல் இயற்றி இருக்கிருர்கள். அதனை எனக்குப் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் வழங்கினுர். அஃது எனது யாப்பருங்கல விருத்தியுரை பதிப்பிற்கு மிகவும் உதவியது.

டாக்டரவர்களுடன் அளவளாவுகிற பொழுதே அரிய கருத்துக்களை அறிந்து கொள்ளலாம். அது தான் கற்றேர்களோடு உசாவுகிற நலன்.

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் — என்றேர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்று பாரதியாரால் பாராட்டப்பெற்ற சிலப்பதிகாரத்தை 'முத்தமிழ் வித்தகராகிய' சிதம்பரநாதனுரைவிட இலக்கணக் கூறுபாடுகள் சிறக்க இலக்கிய நயம் ஓங்கச் சொல்லக் கூடியவர்கள் யாருமில்லை' என்று புகழ்மாலை சூட்டினுர்.

எழுத்தாளர் தலைவர்

அடுத்து தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் மயிலை சீனி. வேங்கடசாமியவர்கள் சிலப்பதிகாரத்தை ஆய்வுக் கண்ணேடு ஒப்பு நோக்கி உலகறியச் செய்தவர்" எனச் சிதம்பரநாதனுரைப் பாராட்டினுர்.

பெண்கள் சார்பில்

பின்னர் பெண்களின் சார்பில் பேராசிரியரிடம் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற, இன்னுள் மேரி அரசி கல்லூரி பேராசிரியையாக விளங்கும் திருவாட்டி அ்சத்வனி அவர்கள், செந்தமிழ்க் காவலரின் நல்லியல்புகளையும், மனத்தில் பதியுமாறு பாத்திரமாகவே மாறி நடித்துக்காட்டும் போதனைமுறைகளையும் நகைச்சுவையுடன் விளக்கினுர். சிலப்பதிகாரத்தை மட்டுமின்றி, மனேன்மணீயத்தையும் பேராசிரியரவர்கள் சுவைபட விரிவுரை நிகழ்த்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மாணவர்கள் சார்பில்

சிலப்பதிகாரத்தைத்தொடர்ந்து கேட்டு பயனுற்ற மாணவர்கள் சார்பில் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் திரு இரா. கு. நாகு எம்.ஏ. அவர்கள், 'சிலப்பதிகாரம் தமிழ்நாட்டின் தேசிய இலக்கியம் என்றும், அதனைப் பேராசிரியர் வாயிலாகப் பாடங் கேட்ட பொழுது 'உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிந்தோம்' என்றும் குறிப்பிட்டார். 'சிலம்புள கொண்டம்' மதுரை மூதூர் செந்நெறி' போன்ற இடங்களிலுள்ள இலக்கணச் சிறப்புக்காகவே அரை மணி நேரங்கூட எடுத்து விளக்கிய அருமைப்பாட்டினை நினைவு கூர்ந்தரர் திருநாகு. அதைப்போலவே பேராசிரியர் அவர்கள் திருக்குறளை வாழ்வில் தக்க இடங்களில் பயன்படுத்தித் தமிழின் பெருமையைக் காத்து வந்திருக்கிருர்" என்று சீரியதொரு சொற்பொழிவாற்றினுர்.

அன்பர்கள் சார்பில்

உடன் பேசிய திரு. ஊ. செயராமன் (முன்னுள் எழுத்தாளர் சங்கச் செயலாளர்) டாக்டரின் நூல் நயங்களையும், வாழ்வியல் நுட்பத்தையும் நேர்த்தியாகச் சித்தரித்தார். பேராசிரியரின் நண்பர் என்ற முறையில் புலவர் திரு. எம். சி. கண்ணபிரான் தாம் கண்ட அருமை பெருமைகளை அவையினர்க்கு விருந்தாக்கினுர்.

நாவலர் பாராட்டு.

இறுதியாக இன்னுரை யாற்றிய நாவலர். நெடுஞ்செழியன் அவர்கள், "இலக்கண வரம்பின் காரணமாகத்தான் தமிழ் இன்னமும் உயிர் வாழ்கிறது—2500 ஆண்டுகளுக்கு முன்னுல் தோன்றிய தொல்காப்பியத்தை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனுல் சாசர் எழுதிய ஆங்கிலத்தை உணர்பவர் எத்தனை பேர்? எனவே செம்மையான அளவிலே மொழிவளர, செந்தமிழ்க்காவலர் போன்றேர் இலக்கணவேலி சிதறிவிடாமல் காப்பாற்றித் தருகிருர்கள்.

தமிழகத்தின் பொலிவு ஏற்ற பொற்காலத்தை என்றென்றும் அகில உலகத்திற்கும் அறைகூவ, கோர்வையாகக் கிடைத்திருக்கிற ஒரே இலக்கியம் சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் சங்க இலக்கியம் பல ஓவியங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு. அதிலே புலவர்களுடைய திறமையை அறியக் கருத்துக்களைத் திரட்ட வேண்டும், ஆனுல் தமிழகத்தின் பொலிவும் வலிவும், வேறுபல வீரத்துறைகளையும், சேர, சோழ, பாண்டியத் தமிழகம் முழுவதும் ஒரு காவியத்துள் அடங்கும் வகையில் இயற்றப் பெற்ற ஒரு பெருங் காவியம் சிலப்பதிகாரம்.

நம்முடைய தமிழ் இலக்கியங்களை முக்கனிக்கு ஒப்பிடலாம். தற்கால இலக்கியங்களை வாழையெனக் கொள்ளலாம். இடைக்கால இலக்கியங்கள் மாம்பழத்தைப் போன்றவை. சங்ககால இலக்கியம் பலாப்பழம். ஒன்றைவிட மற்றென்று காலம் முன்னே செல்லச் செல்ல சுவைமிகுதி. ஆனுல் பலாப்பலத்தைப் பறித்தவுடன் அது ஒரு பழமாகவே தோன்றுது. அதன் முள் போன்ற தோலை நீக்கி, உள்ளே பிடித்து இழுத்து, கொட்டையை அகற்றி, தேனிலே தோய்த்துச் சுவைக்க வேண்டும். அப்படி சுவைக்கக் கூடிய, நமக்கு இலக்கிய அறிவை ஊட்டும் சிரமத்தை எடுத்துக் கொள்பவர்தான் சிதம்பரநாதன் போன்றவர்கள்.

அவர் அரசியல் வாதியுங்கூட; ஆனுல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட அரசியல் தலைவர் அப்படிப் பட்டவர்களும், கட்டுப்பாட்டின் காரணமாகச் சில கருத்துக்களைக் கட்சி அரசியல்வாதி சொல்ல முடியாமல் இருக்கும்பொழுது சொல்லத் தேவைப்படுகிருர்கள் தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும், அவர் அரசியல் அவைகளுள் உறுப்பினராக இருந்து ஆற்றி வரும் தொண்டு சிறந்தது.

சிலப்பதிகாரத்தைப் பாடங் கேட்டால் மட்டும் போதாது. சிலப்பதிகார காட்சி அனைத்தும் சிறந்த ஓவியங்களாகத் தீட்டப் படவேண்டும். அப்பொழுதுதரன் உவமைகளை, பண்டைய மலர்களைப் பற்றியெல்லாம் நன்கு புரிந்துகொள்ள முடியும். அந்தப் படங்கள் தமிழ்மக்கள் வீடுகளிலெல்லாம் விளங்கவேண்டும். இதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட வேண்டும்" என்று சிறப்புறையாற்றினுர். நாவலரும் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் செந்தமிழ்க் காவலரிடம் தமிழ் பயின்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

பதிலுரை.

தமக்களிக்கப் பெற்ற பாராட்டுகளுக்குப் பதிலுரை வழங்கிய செந்தமிழ்க் காவலர் அவர்கள், அண்ணமலை பல்கலைக் கழகத்தை விட்டுத்தாம் விலக நேர்ந்தபோது மாணவர்களோடு அளவளாவும் வாய்ப்பின்றிப் போயிற்றே என்று தாம் கொண்ட கவலை, பட்டிமன்றத்தில் பல திறப்பட்ட அன்பர்களுக்கும் இடையே சிலப்பதிகார வகுப்பு நிகழ்த்தியபோது மறந்துவிட்டது என்றும், சிலப்பதிகார இன்பத்தைத் தமக்குச் செவ்வித்தின் காட்டிய பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், தமக்குத் தமிழ்ப் பேராசிரியர்களாக விளங்கிய நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், ரா. பி. சேதுப்பிள்ளை முதலியோரை நினைந்து போற்றுவதாகவும், தாம் சிலப்பதிகாரத்தை விரிவுரை நிகழ்த்தியதின் விளைவாக பட்டிமன்றத்து அன்பரும், மாணவரும் பேசிய பேச்சுக்கள் அதன் பயன் ஈடேறிவிட்டது. என்று தாம் நம்புவதாகவும், அனைவர்க்கும் நன்றி தெரிவித்து அடக்கத்துடனும் உருக்கத்துடனும் சொற்பெருக்காற்றினுர்.

கூட்டத்துவக்கத்தில் திரு. கே. பக்தவச்சலம்; மன்றச்சார்பில் பாராட்டிதழ் ஒன்றைப் படித்தளித்தார். நடுவர் தமது கையால் மன்றத்தினரின் அன்புச் கையுரையாக வெண் பொற்றுமரைக் குத்துவிளக்கொன்றினைக் கொடுத்துதவினுர். சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் சொற்களஞ்சிய துணையாசிரியர் திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் பி. ஏ. வும், நக்கீரர் கழகத்தின் சார்பில் திரு. சிறுவை. மோகனசுந்தரமும் மாலை மரியாதை செலுத்தினர். திரு. வே. அ. பாலகிருஷ்ணன் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது!

"கே. ப. வ".

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581

காமராசர் திட்டம் காங்கிரசுக்கு நட்டம்!

"அரசியல் வரலாறே கண்டிராத புத்தம் புதிய திட்டம்" என்று சொல்லப்படும் ஒரு திட்டத்தைத் தந்ததின் மூலம், இன்றையத் தினம், திரு. காமராசர் சில பெரிய மனிதர்களால் உச்சி மேல் வைத்து மெச்சப்படுகிறார்!

'காமராசர் திட்டம்' கொண்டு வரப்பட்டதற்கு காங்கிரஸ்காரர்களே கூறும் காரணம்:—

காங்கிரஸ் சுயநல கும்பலாகி விட்டது!

கோஷ்டிச் சண்டையும், பதவிச் சண்டையும் மிகுந்து விட்டது!

மக்கள் மத்தியில் செல்வாக் கிழந்து விட்டது!

உண்மைத் தொண்டர்கள் காங்கிரசில் இல்லை!

-இப்படி இன்னும் பல சேர்ந்து முடைநாற்றமெடுத்துப் போன நிலைமையை ஒழித்து சீர்திருத்தம் செய்யவே, புரட்சிகரமான இத்திட்டம் கொண்டுவரப்பட்டது!

காமராசர் திட்டம் தீர்த்து வைக்கும் பிரச்சினைகளிலே, மூத்த மந்திரிகள் பதவியைவிட்டு விலகி. கட்சியை வளர்க்கப் பாடுபட வேண்டும் என்பதும், பதவிக்காக போட்டியிடும், பண்பற்ற செயலைப் போக்கவேண்டும் என்பதும், திட்டத்தின் இரு படிகள்!

அந்த இரு படிகளும் திட்டம் உருவாக்கப்பட்ட உலைக்கூடமான தமிழகத்திலேயே உடைத்தெறியப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்த பக்தவச்சலம் முதலமைச்சர் பதவியேற்றார்!

ஆர்.வி. சுவாமிநாதன் அவரை எதிர்த்துப் போட்டியிட்டார்!

"பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமைக்குப் போட்டியா? இதை தவிர்க்க முடியாமல் போய்விட்டதே!" என காமராசரே புலம்பும்வண்ணம் திரு. ஆர். வி. சாமிநாதன் கோஷ்டியினர், பதவிப் போட்டியை ஏற்படுத்தி, இங்கு பதவிக்காகப் போட்டியிடத்தான் ஆள் உண்டே தவிர, பதவித் துறவு கொள்ள யாரும் தயாராகயில்லை! என்பதை செயல் மூலம் தெளிவு படுத்திவிட்டார்!

திட்டம் உருவாக்கப்பட்ட தமிழகத்திலேயே இந்த நிலை என்றால் மற்ற மாநிலங்களைப்பற்றி சொல்லத் தேவையில்லை!

புது வீடு!

"புது வீடு கட்டிய ஒருவர் முதல் 6 மாதத்திற்கு வீட்டில் தூசு தும்பு சேராமல் பார்த்துக் கொள்வார். திருமணமான ஒருவர் முதல் 5 ஆண்டுகளுக்கு மனைவி மீது அன்பாக இருப்பார்.

அதைப்போல் காமராசர் திட்டத்திற்கு 6 மாத காலத்திற்கு பரபரப்பு இருக்கலாம்"

—அண்ணா

பீகாரிலே சனநாயகம் சாகடிக்கப்பட்டிருக்கிறது! இன்றைய முதலமைச்சர் ஆதரவாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றனர்.

மத்திய பிரதேசத்தில், மக்கள் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் — கொலைக் காரர்களைப்போல், கத்தி முனையிலும், மிரட்டி, அமைச்சர் தேர்வுக்கு ஆள் சேர்திருக்கிறார்கள். பதவி விலகிய மாநிலங்களில் எல்லாம் சிகரமானது உத்திர பிரதேசம்! இது அகில இந்திய ரட்சகர் ஆசியாவின் சோதி நேருவின் மாநிலமாம்! இங்கேயாவது சனநாயகம் வாழ்ந்ததா? என்றால் அதுவும் இல்லை!

அமைச்சர் தேர்வுக்கு வாக்களிக்க வேண்டிய அங்கத்தினர்களுக்கு 5000 ரூபாய் வரை லஞ்சம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது!

இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், காந்திஜெந்தியில் அமைச்சர் அவை அமைக்க இருந்தவர்கள், பூசல்களின் காரணமாக அமைச்சரவையும் குறிப்பிட்ட தினத்தில் அமைக்க முடியாமல் போனதுதான்!

பதவி விலகிய அமைச்சர்களுக்குப் பதில் வேறு அமைச்சர்கள் தேர்ந்தெடுப்பதற்கே இந்த நிலை என்றால்? பதவியை துச்சமென மதித்து—துறவறம் பூண்ட, புத்தரெனும் சித்தார்த்தனைப்போல் விலகியதாக கூறப்படும் அமைச்சர்கள் நிலை என்ன?

காமராசர் திட்டம்! அது ஒரு சூழ்ச்சிகரமானது! விரும்பாத அமைச்சரை விரட்டுவதற்கென்றே கொண்டுவரப்பட்ட திட்டம்!

"**தன்னுடைய மாநிலத்தில் உள்ள நிலைமையை சமாளிக்க இத்திட்டம் பயன்படுமே என்றே காமராசர் இத்திட்டத்தை கூறினார். தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கு வளர்ந்து வருவதை முன்னிட்டு, தம் உழைப்பை தன் கட்சிக்கு செலவிட காமராசர் விரும்பினார்**"—என்று விலகிய அமைச்சர், திரு. எஸ். கே. பாட்டில் சொல்வதை மனதில் நிறுத்துப்பார்த்தால் எந்த அமைச்சரும், தாமாக ராசினாமா செய்ததாக, நம்புதற்கு இடமில்லை!

தென்னகத்தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள், 'தி. மு. கழகத்தை அழிக்க நினைத்தே இத்திட்டத்தை திரு. காமராசர் உருவாக்கியுள்ளார்' என்றபோது கேலி பேசிய, பெரிய மனிதர்கள் இன்று திரு. எஸ். கே. பாட்டில் கூறுவதற்கு சரியான விளக்கம் கூற முன்வராதது வேடிக்கையே!

'தமிழ்நாடு', காங்கிரசார் கையிலிருந்து அறிஞர் அண்ணாவிடம்

சி. துரைச்செல்வம்

சென்றுவிடுமோ? என்று அஞ்சி காங்கிரசை பலப்படுத்தவே காமராசர் திட்டம் வகுத்துள்ளார். ஆனால், அவர் எண்ணியதற்கு மாறாகவே — செயல்கள் எதிர் கோணத்தில் நடந்துகொண்டிருக்கின்றன!

இதுவரை பதவிச் சண்டை இல்லாத இடம்! காங்கிரஸ் கோஷ்டிச் சண்டைகள் கிடையாது! இலஞ்சம், இங்கு கொஞ்சமேனும் இல்லை! என்பதாலேயே, தமிழ்நாடு பலராலும் பாராட்டப்பட்டது. ஆனால் இன்றோ? காமராசர் திட்டம் வந்த பிறகு? மற்ற மாநிலங்களில் உள்ள எல்லாம்— இங்கே தமிழ் நாட்டில் உண்டு என்று நிரூபித்துவிட்டார்கள்!

"**முதலமைச்சர் தேர்தலில் ஏற்பட்ட போட்டி திடீரென்று ஏற்பட்ட போட்டியாக சொல்லப்படுகிறது! போட்டி என்பது திடீரென்று ஏற்பட முடியாது! திட்டமிட்டுதான் போட்டியிட முடியும்! இந்த போட்டி ஜனநாயகத்தை வாழ்விக்கவே ஏற்பட்ட போட்டியாக கூறப்படுகிறது! ஆனால் கடந்த பத்தாண்டுகாலமாக காங்கிரசில் சனநாயகம் காணப்படவில்லை!" என்று தினச்செய்தியே எழுதுகிற அளவிற்குத்தான் காமராசர் திட்டம் வெற்றியளித்து உள்ளது!**

பத்தாண்டு காலமாக காங்கிரசில் சனநாயகம் இல்லை என்றால்? திரு. காமராசர் ஆட்சிக்கு வந்த பின் சனநாயகம் செத்துவிட்டது என்று விளக்கத் தேவையில்லை!

நாங்கள்தான் சனநாயகத்தை வாழ்விக்கின்றவர்கள் — சனநாயகத்தை வளர்க்கின்றவர்கள்! என

வாதிடும் காங்கிரஸ்காரர்கள், இதற்கு நியாயமாக என்ன பதில் சொல்லப்போகிறார்கள்!

காமராசர் திட்டம் மந்திரக் கோலல்ல! அதை இப்போது குறை சொல்லாதீர்கள் என்று மொரார்ஜிதேசாய் கூறுகிறார்!

இப்போது குறை சொல்ல வேண்டாம் என்றால்? குறைகூறி இடித்துரைக்க நேரம் ஒன்று இருக்கிறது என்றுதானே பொருள்! இப்படி சொல்லுகின்ற தேசாய் பட்டியலையும் இணைத்துக் கொள்ளத் தவறவில்லை!

உத்திரப் பிரதேச முதலமைச்சரான—திருமதி சுதேசா கிருபளானி அம்மையாரோ, என் மந்திரி சபையை அமைத்துக் கொள்ள எனக்குத் தெரியும் யாரும் இதில் தலையிட வேண்டாம் என கண்டிப்பாகக் கூறியுள்ளார்கள்!

இப்படி எந்த கோணத்தில் இருந்து—காமராசர் திட்டத்தை நோக்கினாலும், திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக தெரியவில்லை!

திட்டத்தினால் பெரும் பலன் ஏற்படும் என எண்ணி இருந்த பிரதமர் நேருவிற்கு இது மற்றும் ஒரு பிரச்சினையையே ஏற்படுத்தி இத்திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என சபதம் செய்ய வேண்டிய அவல நிலைதான் ஏற்பட்டிருக்கிறது!

இப்படி பல திக்குகளில் இருந்தும், எழும்புகின்ற அம்புகள் எல்லாம் சனநாயக மெனும் உடலிலே தான் சென்று தைக்கின்றன! இனி காங்கிரசில் சனநாயகம் இல்லை! பணநாயகம் தான் உண்டு! பதவி துறப்போர் இல்லை பதவி வெறியர்கள்தான் உண்டு! இவர்களில் ஏகபோக கூடாரம் தான் காங்கிரஸ் மாளிகை! இதற்கு அவர்கள் கூறுவது சனநாயகத்தை வாழ்விக்கவேபதவிப் போட்டி இடுகிறோம்! ஒருவேளை இதுவும் ஒருவகை சனநாயகமோ? இல்லை காங்கிரசின் தனி நாயகமோ!

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

அக்டோபர் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி: 'திராவிடன்'

அடுத்த வாரம்

வழக்கம்போன்று இரு வண்ணத்துடனும், அண்ணாவின் முக்கிய அறிக்கைகள், 'அண்ணாவுடன் நான்' கட்டுரை முதலியன வெளிவரும். ஆ-ர்

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1